(1937), *இரு சகோதரர்கள்* (1936) மற்றும் *சதிலீலாவதி* (1936) ஆகியவற்றின் முன்னேற்றத்தை உள்ளூர் வழக்கில் சிலோன் பதிப்பகமான *ஈழகேசரி*யில் 1938இல் பதிவிட்டார் (புதுமைப்பித்தன், 2004, ப.61). சினிமாவில் தமிழ் மொழியின் பயன்பாடு என்று வரும்போது கல்கிதான் கறாரான விமர்சகராக இருந்தார். கர்னாடக இசையைத் தமிழ் சினிமாவில் பயன்படுத்துவது பற்றிய அதிருப்தி அவரது பிற்காலத்திய *ஆடல் பாடல்* கட்டுரைகளில் (*கர்னாடகத்தால்* அங்கீகரிக்கப்படவில்லை) நன்கு வெளிப்படுகிறது; புராணங்களைத் அடிப்படையாகக் கொண்டிராத படங்களை பாராட்டினாலும் விஷயம் தெரிந்த தமிழ் ரசிகர்கள் பாடல் மற்றும் பிற அலங்கார விஷயங்களை விட திரைக்கதை, நடிப்பு ஆகியவற்றின் தரமே அதிகமாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாக கல்கி கூறினார் (*ஆடல் பாடல்*, 2004, ப.47).

கல்கி: தமிழ், புராணக் கதைகள் மற்றும் இசை

புராணக் கதைகள் பல்கிப் பெருகுவது குறித்த கல்கியின் இரட்டை மனநிலை, கர்நாடக இசையை மீதான ஆர்வம் மற்றும் தமிழ் வசனங்கள், அவை பேசப்படும் முறை தொடர்பான அவரது நுண்ணிய விமர்சனங்கள் ஆகியவை இன்றளவும் தமிழ் சினிமாவின் அடிநாதமாக விளங்கும் பிராந்திய/தேசிய அல்லது உள்ளூர்/உலகளாவிய வீச்சைக் காட்டுகின்றன. 1936 மார்ச்சில் *நவீன சதாரம் என்ற திரைப்படத்துக்கு* அவர் எழுதிய விமர்சனத்தில் 'தமிழ் பேசத் தெரியாத' ஸ்ரீமதி இந்துபாலாவை (வடக்கிலிருந்து வந்தவர்) நடிக்க வைத்திருந்ததைக் கடுமையாகச் சாடியிருந்தார் (கர்னாடகம்,1936, ப.26). மேலும், புகழ்பெற்ற நாட்டுப்புற நாடகத்தைத் தழுவி வெளியான *நவீன சதாரம்* ஒளிப்பதிவுத் தரத்தைப் பொறுத்தவரை தான் பார்த்ததிலேயே மிக மோசமான படம் என்கிறார்; ஒலிப்பதிவும் சரியில்லாமல் வசனங்கள் பொருத்தமில்லாமல் இருந்தனவாம்: பெயர் என்ன என்ற கேள்விக்கு கதாநாயகி 'என் பெயர் நவீன சதாரம்' என்று பதிலளிக்கிறார். முன்பு வெளியான *சதாரம்* படத்தின் மறு ஆக்கத்துக்கு *நவீன சதாரம்* எனப் பெயர் வைத்தது சரியே என்றாலும் கதாநாயகிக்கும் அதே பெயர் வைப்பது பொருத்தமற்றது. கதாநாயகிக்குப் படத்தின் பெயரை வைத்ததிலிருந்து திரைக்கதை எழுதியவருக்கு எதுவுமே தெரியவில்லை என்பது தெளிவு என்கிறார் கல்கி. பாதி படத்திற்கு மேல் பார்க்க முடியாமல் அழகான கதாநாயகி ஸ்ரீமதி எஸ்.டி. சுப்புலட்சுமியின் திறமையை வீணடித்து விட்டனர் என்றுவருந்துகிறார்.

சுப்புலட்சுமியின் ஆளுமையையும் நடிப்புத் திறனையும் பாராட்டும் அதேவேளையில் சுப்புலட்சுமியின் துரதிருஷ்டமோ, தமிழ்சினிமா ரசிகர்களின்துரதிருஷ்டமோ, அவர் நடித்த எந்தப் படமும் 'முதல் தரப் படம்' என்று சொல்லும் அளவுக்கு வரவில்லை என்கிறார் கல்கி. சிறந்த திரைப்படங்கள் பட்டியலில் அவரது ஒரு படம்கூட வராதபோதும் 1935இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் எஸ்.டி. சுப்புலட்சுமி அந்த ஆண்டின் சிறந்த கதாநாயகியாக வாக்குகளைப் பெற்றபோது (ப.27) வடக்கத்திய நாயகிகளான ஸ்ரீமதி சவிதாதேவி

போன்றோருக்குப் பதில் (ப.28) சுப்புலட்சுமி, எம்.எஸ். விஜயாள் ஆகியோரை நடிக்கவைப்பது குறித்து அதிருப்தி அடைந்த வாசகர்களின் கடிதங்களை மேற்கோள் காட்டுகிறார். வாக்கெடுப்பு நடத்தியவர்கள் தமிழ், ஹிந்தி, தெலுங்குப் படங்களுக்குப் பொதுவான வாக்களிப்பு முறை வைத்ததைத் தவறு என கல்கி சுட்டிக்காட்டுகிறார்: வாக்களித்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்பதால் அவர்கள் தாங்கள் பார்த்ததில் சிறந்ததை மட்டுமே தெரிவு செய்திருந்தனர். எதிர்காலத்தில் ஒவ்வொரு மொழிக்கும் தனியான வாக்கெடுப்பு நடத்தப்படும் என கல்கி நம்பிக்கையுடன் கூறுகிறார்.

ஆக, கல்கியின் எழுத்துகளிலிருந்து மொழிரீதியாக 1930களின் நடுக்காலம் வரை தமிழ்ப்பட தயாரிப்புகளும் அவற்றிற்கான வரவேற்பும் தனித்துவம் பெறவில்லை என்பது நன்கு புரிகிறது. 1935இல் இந்தி நடிகை சவிதாதேவி சிறந்த நடிகை விருது பெறாததற்குவருத்தம் தெரிவிக்கும் கடிதங்களைப் பிரபல வார இதழுக்கு வாசகர்கள் எழுதினார்கள் என்பதிலிருந்தே நட்சத்திரங்களையும் (படங்களையும்) மொழிபேதமின்றி (தமிழ், இந்தி) வரவேற்று படத் தயாரிப்பு குறைகளையும் சுட்டிக்காட்டியது புரியும்; 1930களின் நடுக்காலம் வரை வெளியான பல தமிழ்ப் படங்கள் சென்னைக் கலைஞர்கள் பணிபுரிய வடநாட்டில்தான் படமாக்கப்பட்டன. தயாரிப்பாளர்களும் தொழில்நுட்பக் கலைஞர்களும் சென்னையைச் சேர்ந்தவர்களாக மட்டும் இருக்கவில்லை. சதர்ன் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் கற்ற எல்லீஸ் ஆர். டங்கன் 1935 முதல் தமிழ்ப்படங்களில் பணிபுரியத் தொடங்கினார். *சதிலீலாவதி, சீமாந்தினி, இரு சகோதரர்கள்* ஆகிய 3 படங்களை அவர் 1936இல் இயக்கினார் (முத்தையா, 2004).

தமிழ் சினிமாவின் முக்கியமான ஆனால் தெளிவற்ற இக்காலகட்டத்தை நகரும் பார்சி நாடகங்களால் உந்தப்பட்ட கம்பெனி நாடகங்களால் பாதிக்கப்பட்ட ஒரு காலமாக தமிழ்ப்பட வரலாற்றியலாளர் தியோடர் பாஸ்கரன் பார்க்கிறார் (பாஸ்கரன், 2009, ப.29-31); கிராமபோன் ரெகார்ட் தொழில், புகழ்பெற்ற நாடகங்களைத் திரும்ப மேடையிடுதல், பாடகர்களைப் பிரபல நட்சத்திரங்களாக ஆக்குதல், பிராந்தியத்தின் பெரியசந்தையின் ஆதாயம் பெறுதல் ஆகியவை 1930களின் தமிழ்த் திரைப்படத் துறையையும் நட்சத்திரங்கள், ஆக்கம் மற்றும் வடிவத்தை நிர்ணயிக்கக் காரணம் என்கிறார் ஹியூக்ஸ் (ஹியூக்ஸ், 2007). இவ்விரு கோட்பாடுகளின் மதிப்பையும் அடிக்கோடிடும் கல்கியின் விமர்சனம் பிரபலமான நாடகங்கள் (*பிரகலாதன் சரித்திரம், பாதுகா பட்டாபிஷேகம், சதாரம்* போன்றவை), கிராமபோன் ரிகார்டுகளால் பாடல்கள் / நாடகங்கள் பரவி அதனால் பிரபலமான கலைஞர்கள் (எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, ரத்னாபாய், சரஸ்வதிபாய்) ஆகியோரின் படைப்புகளைத் தழுவி வந்த படங்களை உதாரணம் காட்டுகின்றன. [புராணப்படங்களான *பிரகலாதன் சரித்திரம்* (1933), *சீதா கல்யாணம்* (1934), *பக்த நந்தனார்* (1935), *மாயா பஜார் என்கிற வத்சலா கல்யாணம்* (1935), *பாதுகா பட்டாபிஷேகம்* (1936), *பக்தகுசேலர்* (1936),

மகாபாரதம் (1936) மற்றும் *கருட கர்வபங்கம்* (1936) மீது அதிக கவனம் செலுத்திய தமிழ் சினிமா பற்றிய கல்கியின் எழுத்துக்கள் (கர்னாடக இசையில்) பயிற்சிபெற்ற பாடகர்களின் மையநிலையை எடுத்துரைத்தன; 1930களின் நடுக்காலம் வரை — புராணப்படங்களிலிருந்து விலகி சமூகப் பார்வை ஆரம்பித்துவிட்டதைக் காட்டிய *மேனகா* வெளிவரும் வரை — இந்நிலைதான் நீடித்தது.

எழுதுவதையே தொழிலாக வைத்திருந்த பலர் சினிமாவுக்கு வந்ததற்கு கர்னாடக சங்கீதத்தை இசைத்த பாடகர்கள்தாம் காரணம் என்பது பாஸ்கரனின் கருத்து. பாபநாசம் சிவன் பாடலாசிரியராகவும் இசையமைப்பாளராகவும் திரைத்துறைக்குள் வந்தார்; பின்னர், ஜி.என். பாலசுப்ரமணியன், தண்டபாணி தேசிகர், எம்.எஸ். சுப்புலட்சுமி, முசிறி சுப்ரமணிய ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், ராஜரத்தினம் பிள்ளை போன்றோர் முக்கியமாகப் நல்ல வருமானம் கிடைதது என்பதற்காகவே திரைத்துறையில் இருந்தனர். புகழ்பெற்ற பரதநாட்டியப் பேரொளி ருக்மணி அருண்டேல் *ராஜா தேசிங்கு* (1936) படத்தில் பணிபுரிந்தார். இதனால் இசை ஞானம் இருந்த எழுத்தாளர்கள் திரைப்படத்தைப் பற்றி எழுதத் தெரியாவிட்டாலும் இசை பற்றி எழுதத் தொடங்கினர். ஆயினும், சினிமாவில் செவ்வியல் இசைக் கலைஞர்களின் ஆதிக்கம் குறைந்த காலமே இருந்தது: பின்னணிப் பாடும் தொழில்நுட்பம் வரும் வரைதான் அது தொடர்ந்தது (பாஸ்கரன், 2004, 22). ஏ.கே. செட்டியார் எடுத்த மகாத்மா காந்தி பற்றிய ஆவணப்படத்தில்தான் [*மகாத்மா காந்தி* (1940)] முதன்முதலில் முன்பே பதிவுசெய்யப்பட்ட பாடல்கள் பயன்படுத்தப்பட்டன (பாஸ்கரன், 2002) என பாஸ்கரன் சொன்னாலும் ஏவிஎம்மின் *நந்தகுமார்* (1938) படத்தில் இந்த உத்தி ஏற்கனவே பயன்படுத்தப் பட்டுவிட்டதாக புகழ்பெற்ற பத்திரைகையாளர் ராண்டார் கை (கை, 2007) குறிப்பிட்டுள்ளார்.

நட்சத்திரங்களுடன் இணைந்தும் எப்போதும் சங்கீத சபாக்களை நாடும் உயர்நடுத்தர வர்க்கத்தினரின் ஆதரவுடனும் *விகடன்* போன்ற பிரபல பத்திரிகைகளின் விமர்சனங்கள் மூலமும் தமிழ் சினிமா பெற்ற பல ஆதாயங்களை பாஸ்கரனின் கட்டுரை விவரமாகக் குறிப்பிட்டாலும், 1930களில் திரைப்படங்களில் தோன்றிய, அவ்வளவாகப் பிரபலமடையாத கலைஞர்களின் புகழால் ஏற்படும் சவால்களை கல்கியின் விமர்சனங்கள் அடிக்கோடிட்டுக் காட்டின. மேலும் கல்கியின் எழுத்துகளை கவனமாக படித்தால் அழகுணர்ச்சி, சினிமாவின் வடிவம், பாடல்களைத் தாண்டிய விஷயங்களுக்காக அவர் செலுத்திய உழைப்பு, உண்மையான திறனை உணரும் இயல்பு பற்றியும் பல உண்மைகள் தெரியவரும்.

கல்கியும் சினிமாவும்

பிரகலாதன் சரித்திரம் படத்திற்கு தொடக்கத்தில் விமர்சனம் எழுதிய நாள் முதல் தயாரிப்பிலும் தொழில்நுட்பத்திலும் தெரியும் தவிர்க்கப்படக்கூடிய தவறுகள் குறித்து கல்கி விமர்சனம் செய்யத் தவறியதே இல்லை. உதாரணமாக, பாதி-சிங்கம்-பாதி-மனிதன் என்கிற *நரசிம்ம அவதாரம்* எடுத்து பிரகலாதனை விஷ்ணு காப்பாற்றும் உச்சக்கட்ட காட்சியில் அந்த அவதாரம் கல்கியை பயமுறுத்தவில்லை; மாறாக மோசமாக பொருத்தப்பட்டுள்ள சிங்கமுக முகமூடி விழுந்து விடுமோ என்றுதான் கல்கி பயந்தார் (கர்னாடகம், 1933, ப.23). இந்தியப் புராணத்தின் இணையற்ற பாடகரான — தந்தியுள்ள வாத்தியமான தம்பூராவை இசைத்துக் கொண்டே பாடுபவரான — நாரதர் பாடும்போது பின்னணியில் ஹார்மோனியம், மிருதங்கம் ஆகிய கண்ணுக்குத் தெரியாத வாத்தியங்களின் சப்தமும் பொருந்தாத வகையில் வெளியே கேட்டதை கல்கி குறிப்பிடுகிறார். அதேபோல், பாம்பாட்டி ஒருவன் மகுடியை (பாம்பை மயக்கப் பயன்படுத்தும் புல்லாங்குழல் போன்ற வாத்தியம்) கையில் வைத்து ஊதிக்கொண்டு நடனமாடும்போது எங்கிருந்தோ வரும் மகுடியின் ஒலி திரையை முழுமையாக நிரப்புகிறது. நரசிம்ம அவதாரம் எடுத்தவரின் உதடுகள் மூடியிருந்தபோதும் சிங்கம் கர்ஜிக்கும் சப்தம் பின்னணியில் கேட்டதே இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இருந்தது (ப.28-29).

கர்னாடக இசையை விமர்சிப்பதில் புகழ்பெற்றிருந்த கல்கிக்கு சினிமா விமர்சகர் என்ற முறையில் ஆரம்பகாலப் பேசும்படத்தின் சப்தங்களை நுணுக்கமாக ஆராயும் புரிதல் இருந்ததை இது காட்டுகிறது. நன்கு பயிற்சி பெற்ற அவரது காதுகள் இசைக்கும் அதை உருவாக்கும் வாத்தியங்களுக்கும் பழகியிருந்தன; படக்காட்சியையும் சப்தங்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் சாத்தியக்கூறுகள் இருப்பது பற்றிய விழிப்புணர்வையே ஆரம்ப கால பேசும் படத்தை விமர்சனம் செய்யும் அவரது திறன் காட்டுகிறது. சினிமாவில் ஒலி என்ற புதிய தொழில்நுட்பத்தினால் அவர் மெய்மறந்து போய்விடாமலிருக்க அவரது (நகைச்சுவையுடன் கூடிய) நக்கல் உதவுகிறது. புராணப் படத்திலும் கதை சீராக இருக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பு, முகமூடியை சரியாக வடிவமைக்கவில்லை என்ற விமர்சனமும் உண்மைத்தன்மையை எதிர்பார்க்கும் எண்ணமும் அவரைத் தொழில்நுட்பத்தால் உந்தப்படும் சினிமாவின் நவீனத்துவத்துடன் சேர்ந்து புத்திக்கும் பிற புலன்களுக்கும் ஏற்புடையதான உண்மையான படைப்பை எதிர்பார்க்கும் ஒரு நுண்ணிய விமர்சகராகக் காட்டுகின்றன.

பக்த குசேலர் பட விமர்சனத்தில் *சாகித்தியத்தின்* (இலக்கிய வசனங்கள், பாடல்கள்) தரத்தை அங்கீகரிக்கும் கல்கி தொழில்முறை நடனக்கலைஞர்கள் பலரைப் படத்தில் ஆட வைத்துள்ளதையும் பாராட்டத் தவறவில்லை. குறிப்பாக குமாரி அசூரியின் *கதக்களி* போன்ற நேபாள நடனத்தைப் பாராட்டி, அதன் பின்னணியைச் சாடுகிறார்: தேவையற்ற ஒரு நடனச்சூழலை உருவாக்க பலராமர் கதாபத்திரம் கதைக்குள் திணிக்கப்பட்டது என்கிறார் (கர்னாடகம், 1936, ப.25).

பக்த குசேலரை உருவாக்கிய தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு நல்ல படமெடுக்கத் தெரிந்திருந்தாலும் எங்கு நிறுத்த வேண்டும் என்று தெரியவில்லை: உதாரணமாக, பாலகிருஷ்ணன் (குழந்தை கிருஷ்ணர்) அவ்வளவு நீளமாகப் பேசவேண்டிய அவசியமில்லை; ஸ்ரீகிருஷ்ணர் அவ்வளவு தடவை தலையாட்டத் தேவையில்லை. ஆயினும், கல்கியைப் பொறுத்தவரை ஒருவர் ஆறணா (ரூபாயில் 1/16 பங்கு) செலவழித்துப் பார்க்க வேண்டிய இந்த நல்ல படத்தை சிறந்த படமாக எடுத்திருக்கலாம். 19000 அடி நீளத்தில் 3000 அடியை நீக்கியிருந்தால் *பக்தகு சேலர்* எவ்விதக் குறையுமற்ற படமாக இருந்திருக்கும். படமும் 2½ மணி நேரத்தில் முடிந்துவிடும் (ப.26).

ஒரு நொடிக்கு 24 ஃபிரேம்கள் என்ற விகிதத்தில் 16000 அடி நீளமான படம் திரையில் 177 நிமிடங்கள் ஓடுமென்றாலும் சினிமாவில் சப்தம் தோன்றிவிட்ட பின்னணியில் எல்லாச் சப்தங்களையும் ஒருங்கிணைக்க முடியும் என்பதால், கல்கியின் விமர்சனம் தொழில்நுட்பம் தொடர்பான அவரது ஆழ்ந்த ஆர்வத்தைக் காட்டுவதுடன் பிரபலமான இந்தியப் படங்களின் நீளம் பற்றி அப்போது நிலவிய உரையாடலையும் முன்னரே காட்டி விட்டது. சமீபத்திய தமிழ்ப் படங்களான *சிவாஜி* (2007) & *தசாவதாரம்* (2008) ஆகியவை 185 நிமிட நீளமுள்ளவை. கல்கியின் விமர்சனம் இடம் பெற்றிருந்த பக்கத்தின் நடுவே அச்சாகியிருந்த கத்திரிக்கோல் ஓவியம் படத்தின் உள்ளடக்கம் மீதான அவரது விருப்பத்தையும் தன் எழுத்தின் மூலம் படமாக்குதல் குறித்த தகவல்களை வாசகர்களுக்குத் தெரிவித்தாக வேண்டுமென்ற அவாவையும்தான் காட்டுகிறது (மேலது) (படம் 2ஐப் பார்க்கவும்). இந்தக் கருத்து தமிழ் சினிமா முனேற்றம் அடைவதன் சாத்தியக்கூறுகள் பற்றிய கல்கியின் ஆர்வத்தையும் மூன்று ஆண்டுகள் கழித்து *தியாகபூமி* (1939) படத்தின் திரைக்கதைவசனகர்த்தாவாக அவர் அறிமுகமானது மற்றுமஜெமினி ஸ்டூடியோவை நிர்மாணித்து சினிமா தயாரிப்பு சாம்ராஜ்யத்தை நிறுவிய ஆனந்த விகடன் பத்திரிகை வெளியீட்டாளர் எஸ்.எஸ். வாசனின் சினிமா மீதான ஆர்வமும் புரிகிறது (முத்தையா, 2002).

தமிழ் சினிமாவில் நல்ல திரைக்கதை இருப்பதில்லை எனச் சுட்டிக்காட்டும் கல்கி, நிகழ்வுகள் சீராக இருந்து காண்போரின் ஆர்வத்தைத் தூண்டும் *பாதுகா பட்டாபிஷேகத்தின்* திரைக்கதையைப் பாராட்டுகிறார் (கர்னாடகம், 1936, ப.32). கல்கியைப் பொறுத்தவரை தமிழ் சினிமாவின் பொது இலக்கணம் முற்றிலும் வேறு மாதிரியாக இருந்தது: அரைமணிநேரம் தோட்டம் காட்டப்பட்டபின் கதாநாயகன் மெதுவாக நுழைய மறுபுறத்திலிருந்து இன்னும் மெதுவாக கதாநாயகி நுழைவாள். 10 நிமிடம் நடந்தபின் ஒருவர் மற்றவரைப் பார்க்காமல் இன்னும் 5 நிமிடம் நிற்பார்கள். இருவரும் பார்த்துக்கொண்டபின், அதிர்ச்சியில் பேசமறந்து போய் இன்னும் 3 நிமிடம் நிற்பார்கள். அதன்பின் பாட ஆரம்பிக்கும் அவர்களுக்கிடையே பாட்டுப் போட்டி நடக்கும்; 20 நீண்ட நிமிடங்கள் கழித்துதான் கதாநாயகன் கதாநாயகியை ‘கண்ணே’, ‘உயிரே’ என்றெல்லாம் விளித்துப் பேசுவார். மாறாக, மேற்கத்திய பேசும் படங்களில் பூகம்பம், ரயில்-

சாலை விபத்து, சூறாவளி, கப்பல் மூழ்குதல், 3 காதல் காட்சிகள், 300 முத்தக் காட்சிகள், 700 மைல் கார்ப யணம் எனப் பல நிகழ்வுகள் இந்நேரத்தில் நடந்து முடிந்திருக்கும்.

தமிழ் / இந்தியப் படங்கள் மற்றும் ஹாலிவுட்/மேற்கத்திய படங்கள் பற்றிய பொதுவான கண்ணோட்டம் காலப்போக்கில் மாறியிருந்ததையே மேற்குறிப்பிட்ட கல்கியின் கருத்துகள் காட்டுகின்றன. மேற்கத்தியப் படங்களுடன் ஒப்பிடுகையில் நிகழ்கால இந்தியப் படங்களில் மசாலா அம்சம் மேலோங்கி இருப்பதாகக் கருத்து நிலவுகிறது; ஊமைப்படக் காலத்தில் வேகமான கதையோட்டம், நிகழ்வுகள் நிறைந்த மேற்கத்திய படங்கள் போலன்றி கால ஓட்டத்தை நிதர்சனமாகக் காட்டுவது போலிருந்தது. ஆரம்பகால சினிமா ஒரு கவர்ச்சியான, வண்ணங்கள் நிறைந்த ஒன்று எனச் சொல்லிக்கொள்வது ஒன்றும் புதிதல்ல என்றாலும் 1930களில் வெளியான தமிழ்ப் படங்கள் மேற்கத்தியப் படங்களைவிட மந்தகதியில் இருந்தது என்ற ஒப்பீடு ஒலியின் வருகையும் (கடினமான நேரடி பாடல்பதிவுடன் கூடிய) பாடல்களை மட்டுமே அதிக அளவில் கதையாடலுக்காகச் சார்ந்திருந்த தமிழ்த் திரையுலகில் அதன் தாக்கத்துக்கான சான்றுகளாகத் திகழ்கின்றன. கல்கியின் சாதகமான கருத்துகள், அவர் *ஆனந்த விகடனில்* தனது பத்தியில் எழுதிய மேற்கத்தியத் திரைப்படங்களுக்கான விமர்சனத்தின் மீது கவனம் செலுத்தத் தூண்டுகின்றன. அவை முக்கியமாக சார்லி சாப்ளின் மீது அவருக்கு இருந்த விருப்பத்தின் மீது மையம் கொண்டவையாக இருந்தன.

கல்கி, சாப்ளின் மற்றும் நவீனத்துவம்

சிட்டி லைட்ஸ் படம் பற்றிய கல்கியின் விமர்சனத்திலிருந்து ஆங்கிலப் படங்கள் மெட்ராஸில் எத்தகைய வரவேற்பு பெற்றிருந்தன என்பது புரியும். ஒலியுடன் கூடிய வேறொரு ஆங்கிலப் படத்தைப் பார்க்கச் சென்றிருந்தபோது நடைபெற்ற ஒரு விசித்திரமான நிகழ்வை விவரித்து தன் விமர்சனத்தை அவர் தொடங்குகிறார் (கர்னாடகம், 1933, ப.665). ஆங்கிலம் போலிருந்த ஆனால் காதுக்கே கேட்காத வசனங்களைப் புரிந்துகொள்ள முடியாமல்போன கஷ்டத்தைப் பற்றி விவரமாகச் சொல்கிறார். அதனால், தன்னருகில் அமர்ந்திருந்த இரு பெண்கள் மீது தன் கவனம் சென்றதாகச் சொல்கிறார். வயதான பெண் ஒருத்தி தன்னருகில் அமர்ந்திருந்த நவீன, இளம் பெண்ணிடம் (வசந்தி) தங்களுக்குத் தெரிந்தவர்கள் குறித்த கிசுகிசுக்களிடையே படத்தின் கதையைப் பற்றிஅந்த ரௌடி என்ன கேட்கிறான்?', 'அவள் எதற்கு அழுகிறாள்?'.... என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டதாகக் கூறுகிறார். (ப.666)

தனது கல்வித்தகுதி பற்றி கல்கிக்கு இருந்த கர்வமானது அந்த யுவதி சினிமாவில் காட்டிய ஆர்வம், கதையை விளக்கிய விதத்தில் கரைந்து போனது; அவருக்கு அவள் மீது கோபமும் பொறாமையும் ஏற்பட்டது. அவரை மேலும்

ஆச்சரியம், அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் அப்பெண் (தன் அத்தை கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும்) பதில் இருப்பதாகத் தெரிவித்தாள். 'யார் வில்லன்? மீசையுடன் இருக்கிறானே, அவனா?' போன்ற அத்தையின் ஆர்வம்மிக்ககேள்விக்கு *ஆனந்த விகடனில்* தான் பார்த்த வினாடி-வினா போட்டிக்கான விடைகளையே தான் தந்துவருவதாக அவள் பதிலளித்தாள் (ப.666-667). பாகவதர் / பாடகர் மற்றும் பாதகர் / வில்லன் போல கல்கியின் வார்த்தை விளையாடல்களினூடே உரையாடல் முடிவில் அப்பெண்கள் வினாடி-வினா போட்டிக்கான விடைகளைத் தேடி, கதையைப் பற்றி விவாதித்ததைச் சொல்லும் விதம் அவர் ஒரு அற்புதமான விமர்சகர் / நகைச்சுவை எழுத்தாளர் என்பதைக் காட்டுகின்றன. (அலுப்புட்டும்) பாடகரை தீமை செய்பவருடன் ஒப்பிடுவது மற்றும் (பெரும்பாலும் பதிவுசெய்யப்பட்டு) மிகச் சன்னமாக பின்னணியில் ஒலிக்கும் வசனங்கள், பேச்சுவழக்கு ஆகியவற்றுடனான நிரந்தரப் போராட்டம் குறித்த கருத்தின் மூலமாக தனது விமர்சனத்தையும் கர்னாடக இசை மற்றும் சினிமா மீதான நையாண்டியையும் அழகாக இணைக்கிறார். காட்டுகின்றன 1933இல் சென்னையில் ஒரு ஆங்கிலப் படத்தைப் பார்ப்பதில் கல்கிக்கு சிரமமாக இருந்தது, 1930களில் உருவாகிவந்த பேசும் படங்களையும் (அவற்றுடன்) அதற்கு முந்தைய ஊமைப் படங்களையும் திரையிட்டுவந்த திரையரங்குகள் பேசும் படங்களைத் திரையிடுவதற்கான ஒலித் தொழில்நுட்பத்துக்கு அப்போதுதான் பழகிவந்தன என்பதே அந்தச் சிரமத்துக்குக் காரணம். ஆயினும் *சிடி லைட்ஸ்* முன்னோட்டத்தில் இந்தியாவிலும் மேற்கத்திய நாடுகளிலும் பேச்சு / எழுத்து ஆங்கிலத்துக்கிடையே உள்ள இடைவெளி பற்றிக் குறிப்பிட்டிருந்தார். 8 தசாப்தங்களுக்கு முன் அவர் எழுதிய கருத்துக்கள் இன்றளவும் பொருந்துவது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, சமீபகாலங்களில் சென்னை, மும்பையிலும் படித்த நடுத்தர வர்க்கத்தினருக்காக பல பல்திரை வளாகங்கள் சப்-டைட்டில் போட்டும் போடாமலும் ஆங்கிலத் திரைப்படங்களை ஒளிபரப்புகின்றன; கல்கியைப் போல் அவர்களும் படம் பார்க்கும்போது வசனம் புரிய வேண்டுமென்றுதானே எதிர்பார்ப்பார்கள்!

ஒலியுடன் கூடிய ஆங்கிலப் படம் பார்ப்பதில் கல்கிக்கு இருந்த ஈர்ப்பும் சிரமமும் சினிமாவில் ஒலியின் வருகை குறித்து *சிடி லைட்ஸ்* படத்தில் சாப்ளின் வெளிப்படுத்திய கருத்துடன் ஒத்துப்போகிறது. *சிடி லைட்ஸில்* பேசும்படத்தை சாப்ளின் நக்கலடிப்பதைப் பார்க்கையில் கல்கிக்கு பேசும்படம் புரியாமல் தான் படுகிற பாடு குறைந்தது போலிருந்ததாம் (ப.667). படத்தைப் பற்றி விவரமாகக் கூறிய பின் (ப.667-668), நகைச்சுவையைத் துயரத்துடன் ஒருங்கிணைத்த சாப்ளினின் திறன் தன்னை மிகவும் உணர்ச்சிமயமாக ஆக்கிவிட்டதாக கல்கி கூறுகிறார். *சிடி லைட்ஸ்* ஆரம்பக் காட்சியைப் போல் வார்த்தையால் பேசுவதைவிட உடல்மொழியால் உணர்ச்சிகளை வெளிக்காட்டவே சாப்ளின் அதிகம் விரும்பியதாகக் கல்கி கூறுகிறார். சார்லியின் நடிப்பைப் பாராட்டுவதாக், திரைக்கதையைப் புகழ்வதா என்று குழம்பியதாகக் கூறுகிறார்.! (தமிழ் சினிமாவின்)

அர்த்தமற்ற சிரிப்புத் துணுக்குகளுக்கும் சாப்ளினின் மனதைத் தொடும் நகைச்சுவைக்கும் இடையே எப்பேற்ட்ட வித்தியாசம் என்று கல்கி வியக்கிறார்.

செல்வம் கொழிக்கும் நகரமான நியூயார்க்கில் கிழிந்த ஆடைகளைந்து அங்குமிங்கும் வீடு/வேலையின்றி அலைபவரைக் கதாநாயகனாகவும் ஒரு குருடியைக் கதாநாயகியாகவும் காட்டி நவீன வாழ்வின் ஒவ்வொரு அங்கத்தையும் நக்கலடிக்கும் சாப்ளினின் தைரியத்தை அதீதமாகப் பாராட்டுகிறார் கல்கி (மேலது). இறுதியில், கனமான 'மேக்-அப்'பை கலைத்து 'டிராமா' உலகத்தை விடத்தோன்றும் என்பதால் *சிடி லைட்ஸ்* படத்தை பார்க்க வேண்டாமென்று நடிகர்களை எச்சரிக்கிறார்(மேலது). பிற்பட்டிருந்த நாடகங்களைவிட முற்போக்கான சினிமாவையே விரும்பிய கல்கிக்கு நவீன நியூயார்க் நகரின் செல்வத்தையும் ஏழைகளின் துயரத்தையும் ஒருங்கிணைத்து படத்தில் காட்டியவிதம் மிகவும் பிடித்திருந்தது. சினிமாவின் சாத்தியக்கூறு, அர்த்தம் பற்றிய கல்கியின் அனுமானமானது நவீனம் பற்றிய அவரது உணர்வுகளைக் காட்டுகிறது: ஒருபுறம் நிகழ்காலக் கதைகளை நுண்ணிய படக்காட்சி மூலம் விவரிக்கும் நவீனக்கருவியான சினிமாவின் திறனால் அவர் பாதிக்கப்பட்டாலும் மறுபுறம் நவீனம் என்ற பெயரில் பார்த்துக்கொள்ள நாதியின்றி பலரை விட்டுவிடும் போக்குள்ள சமூகத்தை விமர்சிக்கும் சினிமாவில் திறனை ரசிக்கிறார். *சிடி லைட்ஸ்* படம் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களைப் ஈர்த்தது: உதாரணமாக, எஸ்.எஸ். வாசனின் ஜெமினி ஸ்டூடியோஸ் 1954இல் இப்படத்தைத் தமிழில் *ராஜி என் கண்மணி* என்ற பெயரில் தயாரித்தது.

'சார்லியின் கடைசிப் படம்' என்ற தலைப்பில் சாப்ளினின் *மாடர்ன் டைம்ஸ்* படத்தை 1936இல் கல்கி விமர்சித்திருந்தார். படவெளியீட்டுக்கு முந்தைய விளம்பர ஸ்டண்டானது கல்கிக்கு நாடகக் கம்பெனிகள் வெற்று அறிவிப்புகளால் மக்களைக் கவர அப்போது செய்து வந்த முயற்சிகளை நினைவூட்டியது: 'மூன்று நாட்களுக்கு மட்டும்' (கர்னாடகம், 1936, ப.20). இது உண்மையாக இருந்தால், காரணம் கல்கிக்குத் தெரியும்: *மாடர்ன் டைம்ஸை* விட ஒரு நல்ல படம் எடுக்கப்பட முடியாது என்பதால், நடிப்புக்கு முழுக்குப் போடுவதன் மூலம் தன் புகழைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினார் சாப்ளின். இனி ஒரு படத்தில் அவர் நடிக்க விரும்பினால் அது *ராமாயண* காவியத்திற்குப் பின் புருரவர்கள் பற்றி வால்மீகி மேலும் ஒரு கதை எழுத விரும்புவதற்குச் சமமானதாகும்.

படத்தின் கதைச் சுருக்கத்தைச் சொல்லிய பின் *கதை இலட்சியம்* என்ற தலைப்பில் அசாதாரண பத்தியை எழுதினார். படமெடுப்பதற்கு முன் காந்தியை லண்டனில் சாப்ளின் சந்தித்ததால் நவீன வாழ்வு பற்றிய காந்தியின் கருத்துகளையும் நவீனத்தின் காரணமாகத் தோன்றும் ஒடுக்கப்படும் நிலை மற்றும் அநீதிகளைப் பற்றியும் (ப.21) இப்படம் கூறியதாக எழுதினார். நிகழ்கால வாழ்வை விமர்சித்த இப்படம் பற்றிய தன் கருத்தை வலியுறுத்த கல்கி படத்தின் இரண்டு காட்சிகளைக் குறிப்பிட்டார்: ஸ்டோரில் துணிகளுக்குள்ளே தன்னையே

மறைத்துக்கொண்டு தூங்கும் சாப்ளினை மறுநாள் காலை அவரது (பழைய, அழுக்கான) பேண்ட் வேண்டுமென்று ஒரு செல்வச் சீமாட்டி எழுப்புகிறாள் (ப.22); பின்னர், உணவகப் பணியாளர் வேலையைத் தக்க வைத்துக்கொள்ளப் பாட்டு பாட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் வரும்போது, பாடல் வரிகள் இருந்த கைச்சட்டை முனை தொலைந்துவிட்டதால் கண்டதைப் பாடி சமாளித்தது. அவர் பாடுவது வார்த்தைகள் போல் தோன்றினாலும் அவற்றின் அர்த்தங்கள் யாருக்குமே புரியாது; ஆயினும், உணவகத்துக்கு வந்திருந்தவர்கள் அதனால் மகிழ்ந்தனர். செல்வ வளம் மிக்க நவீன உலகத்தின் அபத்தங்களை சாப்ளின் திரையில் காண்பித்த விதமும் அதன் வெற்று டாம்பீகங்களைப் பகடி செய்த விதமும் கல்கிக்கு மிகவும் பிடித்திருந்தன.. இது தவிர சாப்ளினின் அர்த்தமற்ற பேச்சுக்கள் ஆங்கிலம்போல் ஒலித்தாலும் கல்கியால் எதையும் புரிந்துகொள்ள முடியாத வசனங்களைக் கொண்டிருந்த ஆங்கிலப் படத்தை அவருக்கு நினைவுபடுத்தியதோடு, தமிழ் பேசும் படங்களில் பெரும்பாலான பாடல்கள் வைக்கப்படுவதிலும் பாடப்படுவதிலும் இருப்பதாக அவர் உணரும் அபத்தத்துக்கான சிறந்த உதாரணமாகவும் இருந்தது. வால்மீகி போன்ற காவியப் புலவர், காந்தி போன்ற மாபெரும் தலைவர் ஆகியோரின் பெயர்களைப் பயன்படுத்தியதிலிருந்தே கல்கிக்கு சாப்ளினின் அழகுணர்ச்சி மற்றும் சமத்துவ சிந்தனைகள் மீது இருந்த மரியாதை வெளிப்படுகிறது; சாப்ளினின் நகைச்சுவை மற்றும் (சமூக-கலாச்சார) விமர்சனம் ஆகியவை கல்கியின் எழுத்தில் தாக்கம் செலுத்தினர்.

திரைப்படத்தின் ஒளிப்பதிவு, சப்தம், காட்சியமைப்பு, வேகமான திரைக்கதையைப் புகழும் கல்கி, தொடக்கக்காட்சியை வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது என்கிறார்: வேகமாக நகரும் ஆட்டுமந்தை தொழிற்சாலைக்குள் புகும் வேலையாட்களுடன் சேர்ந்து மறைந்துவிடுகிறது (ப.23). எட்டி கேண்டரின் நகைச்சுவையை மேற்கோள் காட்டும் கல்கி, பார்ப்போரை அழவும் வைக்கும் சாப்ளினின் நகைச்சுவைக்கு ஈடு இணையில்லை என்கிறார். இறுதியாக, படத்தைப் பார்த்தவர்களை அதிர்ஷ்டசாலிகள் என்று கூறும் கல்கி, கலை தன் உச்சத்தை எட்டும்போது சாதாரண விமர்சனத்திற்கு அப்பால் சென்றுவிடுகிறது என்கிறார். இங்கும் கல்கி நகைச்சுவைப் படங்களை ரசிக்கும் ஒரு சினிமா ஆர்வலர் என்பதையே அவரது விமர்சனம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது; வாழ்நாளில் மிகவும் பிடித்த ஆரம்பக் காட்சியை விவரிப்பதில் அழகுணர்ச்சியும் தொழில்நுட்ப அறிவும், தத்துவம் / நவீனம் ஆகியவற்றை விமர்சிக்கும் சினிமாவின் திறனை அவர் புரிந்துகொண்ட விதமும் தெரிகிறது. இருப்பினும், சாப்ளினை விமர்சிக்கையில் கல்கியின் சினிமா ஆர்வம் தலைதூக்கிவிடுகிறது; சினிமாவுக்கு அவரை இட்டுச்சென்று ஒரு விசிறியாகவும் விமர்சகராகவும் இருக்க உதவிய நவீனம் பற்றிய அவரது இரட்டை உணர்வை இதனால் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

சாப்ளினைப் போலவே, ராக்ஸி தியேட்டரில் பார்த்த (கர்னாடகம், 1934, ப.20) ரூபன் மமாலியனின் *குயீன் கிறிஸ்டினா* (1933) படத்தில் க்ரெடா

கார்போவின் நடிப்பும் தனக்குப் பிடித்திருந்ததாகக் கல்கி கூறுகிறார். விளம்பரம் தேட முயலாத கார்போவின் செயல் விளம்பரம் தேடும் சிறந்தவழி என அவரது விமர்சரகர்கள் கூறினாலும் கார்போவின் நடிப்புத் திறனே அவருக்குப் புகழைத்தரும் என்கிறார் கல்கி. ஸ்விஸ் நாட்டு ராணியின் பரிதாப காதல்கதை எளியதாக இருந்தாலும் அமெரிக்கப் படங்களில் வழக்கமாக இருக்கும் ஆபாசமோ, நடனமோ பாடல்களோ இல்லாமல் இருந்ததற்காக படத்தைப் பாராட்டுகிறார் (ப.20-21). அதேபோல் *டாகு மன்சூர்* (1934) இந்திப் படத்தில் பிரதான கதாபாத்திரத்தில் நடித்த பிருத்வி ராஜ்கபூரின் நடிப்பையும் கதாநாயகனாக இருந்தும் பாடல்கள் பாடாத பாங்கையும் பாராட்டுகிறார் (கர்னாடகம், 1935, ப.27). காவியப் பாடகர்கள் கே.எல். சைகல், உமாதேவியின் பாட்டுக்களைப் பாராட்டும் கல்கி *சந்திதாஸ்* (1934) போன்ற முந்தைய படங்களில் அவரகளது தெய்வீகப் பாடல்கள் யாரையும் திரையரங்கிற்கு வரவழைக்கக்கூடியவை (மேலது ப.27) என்கிறார். *டாகு மன்சூர்* மிகச் சிறந்த படம் (ப.23) என்று கூறும் கல்கி தான் ஏற்கனவே இப்படத்தை இரண்டு முறை பார்த்துவிட்டதாகப் பெருமையுடன் கூறுகிறார் (மேலது ப.22).

டாகு மன்சூர்-ன் குழப்பமான திரைக்கதையின் திருப்பங்களை விரிவாக விமர்சிக்கும் கல்கியின் *குயீன் கிறிஸ்டினா* படவிமர்சனத்தை வேறு விதமாக எழுதியிருக்கிறார். அப்படத்தின் முக்கோணக் காதல் கதைச் சுருக்கத்தை ஒரே பத்தியில் எழுதிவிட்டார். எழுத்தாளர் என்ற கல்கியின் பின்னணி விரிவாகவும் துல்லியமாகவும் அவர் கதைகூறலை விமர்சிக்கும் பாங்கின் மூலம் இந்தத் திரைவிமர்சனங்களில் மிளிர்கிறது: இந்த விமர்சனங்கள் தமிழ் பேசும் பார்வையாளர்கள் வேற்று மொழிப் படங்களைப் பார்க்க உதவும் அதே வேளையில் அவற்றின் தெளிவு, கோர்வை மற்றும் ரத்தினச் சுருக்கமான கூறுமுறைக்காக தவறாமல் வாசிக்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன. சினிமா விமர்சனத்தில் ஈடுபட்ட முன்னோடி தமிழ் எழுத்தாளர் என்று கல்கியை அங்கீகரிக்கிறார் பாஸ்கரன். அதே நேரம் கல்கியைப் போன்ற பல தமிழ் எழுத்தாளர்களும் சினிமா விமர்சகர்களும் சினிமாவை இலக்கிய ரீதியாகவே அணுகியதாகவும் அவர் கூறுகிறார் (பாஸ்கரன், 2004, ப.21-23). *ஆனந்த விகடனில்* தொடர்ந்து எழுதிவந்ததன் மூலம் திரைப்பட விமர்சகராக மாறிய பிரபலமான எழுத்தாளர் கல்கிதான் என்பது மேற்குறிப்பிட்ட என் மதிப்பீட்டினால் உறுதியான போதும், அழகுணர்ச்சி சாத்தியக்கூறுகளுடன் படமெடுத்த *சிடி லைட்*போன்ற கலைஞர்களை அவர் (மற்றும் அவர்களின் உலகப் பார்வையையும்) அங்கீகரிக்கத் தயங்கவில்லை என்பதும் தெரியவருகிறது.அதோடு சினிமாவின் தொடக்க கால ஆசிரியர்களான சாப்ளின் (*சிடி லைட்ஸ், மாடர்ன் டைம்ஸ்*), மாமோலியன் (*குயீன் கிறிஸ்டினா*) மற்றும் நிதின்போஸ் (*சந்திதாஸ், டாகுமன்சூர்*) ஆகியோர் (மற்றும் அவர்கள் உலகப் பார்வை) மீது கல்கிக்கு இருந்த பெருமதிப்பு சினிமாவின் அழகுணர்ச்சி சாத்தியக்கூறுகளை அவர் நன்கறிந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது

இருந்தாலும் யாருடைய புகழும் கல்கியை மயக்கிவிடவில்லை. உதாரணமாக, ஹிமன்ஷு ராயின் *கர்மா* (1933) திரைப்பட விமர்சனத்தைப் பார்க்கலாம். படத்தின் ‘ஆசியத் தனமான’ கதையை அவர் மோசமாகத் திட்டியிருந்தார். லண்டன், பாரிஸ், பெர்லினில் இப்படம் புகழ்பெற்றிருந்ததை சுட்டிக்காட்டி விமர்சனத்தைத் தொடங்கும் கல்கி, மேற்கத்திய நாடுகளில் படம் பெற்ற வெற்றியால் தானும் தடுமாறியதை ஒப்புக்கொள்கிறார் (கர்னாடகம், 1934, ப.18), மேற்கத்திய ரசிகர்கள் புத்தகங்களில் மட்டுமே படித்த யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், பாம்புகள், புலிகள், அரசர், மந்திரவாதி, பாம்பாட்டி, ஜப்பானிய கெய்ஷா பெண்கலைஞர், கழுதை ஆகியவையால் அவர்களைக் கவர போடப்பட்ட திட்டத்தையும் கல்கி குறிப்பிடுகிறார். ‘ஐந்து ரோஜாப்பூக்களை விட நீ மெலியவள்; ஆனால் 500 பூக்களை விட அழகானவள்’ என்ற இளவரசரின் வசனங்களைக் கேட்ட கல்கி வருங்காலத்தில் காதல் வசனங்கள் ‘உன் முகம் 32 நிலவுகளை விடப் பிரகாசமானது’, ‘தலைமுடி 27272 மேகங்களை விடக் கருமையானது,’ (ப.22-23) என்றிருக்கலாமென நகைச்சுவையாக குறிப்பிடுகிறார். *கர்மா* திரைப்படத்தின் நீண்ட, அழகுணர்ச்சியற்ற முத்தக்காட்சிகளைக் (இறந்த இளவரசர் உடலை மகாராணி வெகுநேரம் முத்தமிடுவதை) கல்கி சாடுகிறார். கல்கியைப் பொறுத்தவரை இந்தியர்களின் நாகரிகமற்ற வாழ்க்கை பற்றி *மதர் இந்தியா* புத்தகத்தில் மிஸ். (கேதரின்) மாயோ கூறியிருந்ததையே *கர்மா* காட்டியது. ஆகவேதான் இப்படத்தை இங்கிலாந்து நாட்டு விமர்சகர்கள் பாராட்டினர் (ப.20). தன் விமர்சனத்தில் கல்கி மாயோவின் புத்தகத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி அதை ஹிமன்ஷுராயின் *கர்மா*வுடன் இணைத்துக் காட்டுவது அவர் தன் வாசகர்கள் பிரபலமான இயக்குநர்களால் எடுக்கப்பட்ட வணிக ரீதியாகவும் விமர்சனரீதியாகவும் வெற்றிபெற்ற படங்களையும் பகுத்தறிந்து பார்ப்பதற்கான திறனைப் பெற வேண்டும் என்று விரும்பியதைக் காண்பிக்கிறது. மேலும், கதை, படக்காட்சிகளைத் துல்லியமாக அவர் விமர்சிக்கும் பாணியானது அவரது இலக்கிய மற்றும் சினிமா பற்றிய விழிப்புணர்வும் ஞானமும் ஒன்றுக்கொன்று துணைபுரிந்ததை வெளிப்படுத்துகிறது. பாம்பே டாக்கீஸ் என்ற புகழ்பெற்ற படநிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு தேவிகாராணிக்கு உச்சபட்ச கதாநாயகி என்ற அந்தஸ்தைத் தந்திருந்தாலும் அறம்சார்ந்தும் அழகியல்சார்ந்தும் மோசமாக இருந்த *கர்மா* கல்கியைப் பொறுத்தவரை ஒரு தோல்விப் படமே.

கல்கியும் *நந்தனாரும்*: விமர்சனமும் அதன் மேம்படுதலும்

சினிமா விமர்சகர் என்ற வகையில் *ஆனந்த விகடனில் நந்தனார்* (1935) படம் பற்றி கல்கி எழுதியிருந்த சர்ச்சைக்குரிய விமர்சனம் மிக முக்கியமானதாகும். அன்றைய காலகட்டத்தில் உருவான படங்களிலேயே மிக அதிக செலவில் உருவான *நந்தனார்* அதில் நடித்த புகழ்பெற்ற பாடகி / நடிகையான கே.பி. சுந்தராம்பாளுக்கு நந்தன் என்ற பாத்திரத்தில் நடிக்கத் தரப்பட்ட பெருந்தொகையான ரூ.1,00,000 சம்பளத்தால் வெளியீட்டுக்கு முன்பே பரபரப்பைக் கூட்டியது (கர்னாடகம், 1935, ப.26). *நந்தனார்* பட

விளம்பரத்துக்குச் செலவான ரூ.3 லட்சம் பணத்தால் எதிர்பார்ப்புகள் அதிகமானதைச் சுட்டிக்காட்டி விமர்சனத்தைத் தொடங்கிய கல்கி அதற்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.30க்கு அப்படத்தை கிரௌன் தியேட்டரில் பார்த்ததால் எழுந்த ஏமாற்றத்தையும் குறிப்பிடுகிறார் (ப.18). ஆண் வேடத்தில் பெண் நடிகை நடிப்பதை கல்கி ஏற்றுக்கொண்டாலும், நந்தனாராக சுந்தராம்பாளை நடிக்க வைத்த பொருத்தமற்ற செயலைச் சுட்டிக்காட்டுகிறார்: குழந்தையாக நந்தன் வளர்கையில் அருகிலிருக்கும் சட்டையணியாத பையன்களுக்கு மத்தியில் நந்தனார் மட்டும் சட்டையணிந்து 'நீளமுடியுடன்' தென்படுகிறார் (ப.19-20). இதைவிட பெரிய பிரச்சினை என்னவெனில் நந்தனாரின் நாடகபாணி இலக்கியப் பேச்சுக்கும் சிறுவர்களின் உள்ளூர்ப் பேச்சு வழக்குக்கும் இருக்கும் வேறுபாடு; பழக்கம் மாறாமல் படத்தில் படக்காட்சிகளும் ஒலியும் ஒருங்கிணைந்திராத தொழில்நுட்பத் தவறுகளையும் குறிப்பிடுகிறார் (நடிகர் பேசி முடித்த பின்னர்தான் அவ்வார்த்தை திரையில் கேட்கிறது) (ப.21). சுந்தராம்பாள் வாயைப் பெரிதாகத் திறந்து பாடுகையில் காட்டப்படும் அதீத, தேவையற்ற க்ளோஸ்-அப் ஷாட்களில் அவரது தொண்டை முழுவதும் தெரிவதையும் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை: இதற்குப் பதிலாக அவரை வாயை மூடவைத்துப் பாடச் சொல்லியிருக்கலாம் என்பது அவர் கருத்து. தொழில்நுட்பக் குறைபாடுகள், க்ளோஸ்-அப் ஷாட்டுகளின் அளவு, படக்காட்சியுடன் ஒலி இணையாமல் இருத்தல், நந்தனாராக சுந்தராம்பாளை நடிக்க வைத்தது ஆகியவற்றை சுட்டிக் காட்டி சினிமா தொழில்நுட்பம், காட்சியமைப்பு, தயாரிப்பு வடிவமைப்பு, நந்தனின் இலக்கியப் பேச்சு ஆகிய குறைகளைக் கவனிக்கும் தன் நுண்ணிய திறனை வெளிப்படுத்துகிறார்.

நந்தனாகவும் பிராமணராகவும் நடித்த புகழ்மிக்க கர்னாடக இசைக் கலைஞர்களான சுந்தராம்பாள், விஸ்வநாதய்யர் ஆகியோரை மோசமாகப் பாடியதற்காக கிண்டல் செய்யும் கல்கி நாடக மேடையில் பாடுவதைப் போல் 'சத்தமாகப்' பாடிய சுந்தராம்பாளைக் கடுமையாக விமர்சித்து, ஹாலிவுட்டில் பயிற்சி பெற்ற இயக்குநரான எம்.எல். டாண்டன் போன்றோர்கூட சுந்தராம்பாளின் தவறைத் திருத்தத் தவறியது ஏனென வினவுகிறார் (ப.20-21). நவீன சினிமா பற்றியப் பேசும் கல்கி கோபாலகிருஷ்ண பாரதியாரின் நாட்டிய நாடகமான *நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலிருந்து* படத்தின் திரைக்கதை தழுவப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார் (ப.23). படத்தின் வசனங்களுக்கு மாறாக, பாரதியாரின் *நந்தன்* நாடகம் சிவபெருமானால் கூறப்படுவதல்ல: சிவன் பூமிக்கு வந்து நீசசாதியில் (தீண்டப்படாதவர்/கீழ்சாதி) பிறந்த நந்தனாரைத் தழுவித் தன்னுடன் இமயமலையில் உள்ள கைலாயமலைக்கு அழைத்துச் செல்வார் (ப.23-24). சிவலிங்கமும் பாடல் பாடுவது பற்றி ஆச்சரியமடையும் கல்கி சிவனையும் சிவலிங்கத்தையும் ஒருங்கே காட்டும் திறமையாவது படமெடுத்தவர்களுக்கு இருந்திருக்கலாம் என்கிறார் (ப.25). உண்மையை காட்டி நம்ப முடியாததை ஒதுக்கி பல்வேறு வகையில் காட்சிப்படுத்துதலைப் பாராட்டினாலும் பாடல்களை

வெறுக்கும் கல்கி நந்தனின் தீண்டாமை பற்றிய வசனத்தைக் கண்டிப்பது அவரது பார்ப்பனப் பின்னணியால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம்.

நந்தன் படத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை கல்கி விரிவாக ஆராய்ந்திருப்பது படத்தில் சாதி மோதல்களைக் காட்டியுள்ள விதம் குறித்த அவரது பதைபதைப்பைக் காட்டுகிறது. பாரதியாரின் நாடகத்தில் கோபத்தில் நந்தனின் அந்தஸ்தை மறந்து அவனை அடிக்கும் பிராமண எஜமானரின் கைகள் களைப்பு அடைந்து விடுமே என்ற கவலையில் அடிப்பதை நிறுத்துமாறு நந்தன் கெஞ்சுகிறான்; *நந்தன்* படத்திலோ அடிமையைக் கருணையின்றி அடிக்கும் எஜமானர்தான் காட்டப்படுகிறார் (ப.22). தமிழ்நாட்டில் பிராமண எதிர்ப்பு மற்றும் திராவிட ஆதரவு இயக்கங்களை நீதிக்கட்சி நத்தியதன் சமூக-கலாச்சாரப் பிண்ணனியை மறுக்கும் கல்கி, படத்தில் இயல்பாகஜாதிப் மோதல் காட்டப்படுவதை எதிர்க்கிறார் (இர்ஸ்சிக், 1986). மாறாக, அமைதியாக ஒருமைல் தூரம் வரை எஜமானரும் அடிமையும் வெயிலில் நடந்து வந்து நந்தனைக் கட்டிவைத்து அடிக்கப் பொருத்தமான மரத்தை தேடும் காட்சியைக் கிண்டலடிக்கிறார் கல்கி (கர்னாடகம், ப.23). திரைக்கதை/ படத்தொகுப்பில் இருக்கும் தொய்வைச் சுட்டிக்காட்டும் கல்கி, படத்தின் கதாபாத்திரங்கள் கேமராவைப் பார்த்துப் பேசும் உத்தியை விமர்சிக்கிறார். பின்னணியில் இருக்கும் கதாபாத்திரங்களை மறந்துவிடும் நந்தன் மேடை நாடகம் போல் மக்களைப் பார்த்துப் பேசுகிறார் (ப.24). வருங்காலத்தில் தமிழ் சினிமாவை ஆளக்கூடிய தொழில்நுட்பத்தை அத்தனை துல்லியமாகக் கவனிக்கும் கல்கியின் திறனோ படத்தின் சிறந்த கலைஞர்களை (நடிகர்களை) தென்னை மரம், எருமை, ஆட்டுக்குட்டி எனக் (ப.26, படம் 3ஐப் பார்க்கவும்) கிண்டலடிப்பதில் காணாமல் போய்விடுகிறது; கல்கியின் விமர்சனத்திற்கு *சினிமா உலகம்* இதழில் வி. கஜபதி அளித்துள்ள பதிலில் இது விளங்குகிறது (கஜபதி, 2004).

பட விமர்சனத்தில் தாம் விரும்பும் பாடகர்களை மட்டும் பாராட்டி பிறரை நையாண்டி செய்யும் தமிழிதழ்களின் போக்கை கஜபதி கண்டிக்கிறார் (ப.34). *ஹிந்து, தமிழ்நாடு, சினிமா உலகம்* மற்றும் *சுதேசமித்திரன்* ஆகிய இதழ்கள் *நந்தனார்* படம் பற்றியும் சுந்தராம்பாளின் நடிப்பு பற்றியும் சாதகமாக விமர்சிக்க, எதிர்மறையாக விமர்சித்த *ஆனந்த விகடன், தினமணி* இதழ்களின் நோக்கம் பற்றி கஜபதி கேள்வி எழுப்புகிறார். *ஆனந்த விகடன்* (கல்கி), பொறாமை, தேவையற்ற வெறுப்பு, கசப்புணர்ச்சியை (சுந்தராம்பாள் மீதும்) படத்தின் மீதும் கொட்டியுள்ளதாக கஜபதி குற்றம்சாட்டுகிறார் (ப.35). மதிப்புக்குரிய பாடகியும் நடிகையுமான சுந்தராம்பாளின் நடிப்பை விடத் தென்னை மரம் எருமை, ஆட்டுக்குட்டி போன்றவை பரவாயில்லை எனத் தரக்குறைவான விமர்சனத் தாக்குதல் நடத்திய *ஆனந்த விகடனை* அவர் சாடுகிறார் (ப.35-36).

சுந்தராம்பாளுக்குப் பொருத்தமற்ற பாத்திரம் தந்துவிட்டார்களெனக் கல்கி முன்வைத்த விமர்சனத்தை புதுமைப்பித்தனும் ஆதரித்தார். ஒப்பனை, இசை

ஆகியவை ஆக்கிரமிக்கும் நாடகத்தில் அவர் நந்தனாக நடிப்பது சரியே; ஆனால் திரைப்படத்தில் நந்தனில் வாழ்க்கை "இயல்புக்கு நெருக்கமாக"க் காண்பிக்கப்பட வேண்டும். நடிகர் தேர்வு அதற்கெதிராகச் செல்படுகிறது (புதுமைப்பித்தன், ப.62). ஆயினும் கஜபதியும் புதுமைப்பித்தனும் திரைப்படத்தில் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் அழகுணர்ச்சியைக் கல்கி போல் விரிவாக விமர்சிக்கவில்லை: *நந்தனார்* படம் எடுக்கப்பட்ட விதம் மற்றும் அதன் இனிய பாடல்களை புதுமைப்பித்தன் பாராட்டுகிறார் (புதுமைப்பித்தன் மேலது). ஆனால் கல்கியோ *சந்திதாஸ்* படத்திலிருந்து 3 ஹிந்துஸ்தானி மெட்டுக்களைக் எடுத்தாண்டுள்ளதைச் சாடுகிறார் (கர்னாடகம், ப.20). ஆக, சுந்தராம்பாளை கல்கி மட்டும் விமர்சிக்கவில்லை; ஆனால் தன் *நந்தனார்* பட விமர்சனத்தில் பிராமணரல்லாத இசைப்பாடகி சுந்தராம்பாளின் பாடல் / நடிப்பை அவர் விமர்சித்த விதமானது கர்னாடக இசை / படங்களைத் தெரிந்த ஒரு பிராமண விமர்சகராக அவர் எழுதியதாக மதிப்பிடப்படுகிறது

முடிவுரை

ஆனந்த விகடனில் பிரசுரமான விமர்சனங்கள் பற்றிய எனது மேற்கண்ட ஆய்வில் தெரியவருவது போல், கர்னாடகம் என்ற புனைப்பெயரில் விமர்சித்த கல்கியின் சினிமா பற்றிய ஞானமானது தமிழ், இந்திப் படங்களைத் தாண்டி ஹாலிவுட்டின் ஆங்கிலப் படங்கள் வரை மிக ஆழமாகவே இருந்துள்ளது. 1930களில் வெளியான திரைப்படங்களில் பிம்பங்கள், ஒலி, அவை இயைந்து இருக்கும் விதம் ஆகியவை பற்றிய அவரது கருத்துகள் அந்தப் புதிய ஊடகம் மீது சினிமா ஆர்வலர், விமர்சகர் என்ற முறையில் அவருக்கிருந்த எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்துகின்றன. அதேபோல் திரைக்கதை, அது திரையில் எடுக்கப்பட்ட விதம், கதையோட்டம் மீதான அவரது ஆர்வம் ஒரு எழுத்தாளராக அவருக்குள்ளிருந்த சினிமா ஆர்வத்தின் விளைவு. முதலில் அவர் இசைவிமர்சகராக மட்டுமே இருந்தாலும், சினிமா விமர்சனம் என்று வரும்போது திரைக்கதைக்கு ஒவ்வாத நீண்ட பாடல்கள் கதைக்கு இடையூறாக இருப்பதைக் குறிப்பிட்டு அவற்றைத் திரையில் காட்டும்போது தென்படும் தொழில்நுட்ப / அழகுணர்ச்சி விஷயங்களை குறிப்பிடுவதன் மூலம் மாறுபடுத்திக் காட்டும் தன் திறனையும் வெளிப்படுத்துகிறார். ஆக, 1930களில் கிரௌன், ராக்ஸி போன்ற திரையரங்குகளில் பல தமிழ்ப் படங்களைப் பார்த்து தனது விமர்சனங்களின் மூலம் தமிழ் வாசகர்களுக்கு தொழில்நுட்பம்/அழகுணர்ச்சி தொடர்பான அம்சங்களைக் கற்பித்து தனது நகைச்சுவை உணர்வு ததும்பிய தனித்துவமான எழுதும் பாணியின் மூலம் அவர்களை மகிழ்வித்த கல்கி அவர்கள் தமிழ் சினிமாவின் முன்னோடி விமர்சகர் என்ற பட்டத்திற்கு முழுதும் உரியவராவார்.

சினிமா விமர்சகராக இருந்து திரைக்கதை எழுத்தாளராக மாறிய கல்கி தமிழ் சினிமாவில் ஒரு புதிய முன்னுதாரணத்தை ஏற்படுத்தினார்: *ஆனந்த விகடனில்* தொடராக வந்து பின் படமாக உருவான *தியாகபூமி* (1939) திரைப்படத்தின்

கதையை எழுதினார். கல்கி அவர்களைத் தொடர்ந்து பாஸ்கர் சக்தி உள்ளிட்ட எண்ணற்ற இளம் எழுத்தாளர்கள் (குறிப்பாக *ஆனந்தவிகடனில்* இருந்து) வெற்றிகரமான திரைக்கதை ஆசிரியர்களாக தமிழ் சினிமாவில் ஜொலித்தனர்.

**

குறிப்புக்கள்

1. எடுத்துக்காட்டாக கல்கியின் திரை விமர்சனங்களிலிருந்து நித்தின் போஸின் திரைப்படங்களான சண்டிதாஸ் (1934), தாகு மன்சூர் (1935) ஆகியவை சென்னையில் பிரபலமாக இருந்ததை அறிய முடிகிறது. நந்தனார் (1935) படத்துக்கான அவருடைய விமர்சனத்தில் சண்டிதாஸ் படப் பாடல் மெட்டுகள் உரிய எடுத்தாளப்பட்டிருந்ததை அவர் விமர்சிக்கும்போது அதற்குப் பின்னால் உள்ள காரணங்களை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது

2. காண்க தியோடார் பாஸ்கரன் (2009, பக்கம் 66) ”இன்றும் தமிழ் சினிமாவில் வசனங்களின் ஆதிக்கம் தொடர்வது காட்சி உணர்வின் எந்த விதமான வளர்ச்சியையும் தடுக்கிறது. காதலன் (1994) திரைப்படத்தில் வில்லன் கேமராவைக் காண்பதன் வழியே மக்களை நோக்கிப் பேசும் காட்சியைக் குறிப்பிட்டு முன்பக்கத்தைக் காண்பிக்கும் வழக்கத்தை அவர் விமர்சித்திருந்தார். பாஸ்கரன், தியோடார்

3. கல்கத்தா நியு தியேட்டர்ஸ் நிறுவனத்தால் 1931இல் தயாரிக்கப்பட்ட படம் *பிரகலாதன் சரித்திரம்*. விவரங்களுக்குக் காண்க நாராயணன் (2008, ப.114) சென்னையில் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படுவதை தொடங்கிவைத்த முன்னோடிகளில் ஒருவர் ரகுபதி வெங்கையா. அவரால் 1916இல் சென்னை தங்க சாலையில் கட்டப்பட்ட கிரௌன் திரையரங்கம் சென்னையின் மிகப் பழமையான திரையரங்கங்களில் ஒன்று, துரதிருஷ்டவசமாக அவர் சென்னையில் கட்டிய கிரவுன், கெயிட்டி, ராக்ஸி ஆகிய மூன்று திரையரங்கங்களும் அண்மைய ஆண்டுகளில் இடித்துத் தள்ளப்பட்டுவிட்டன. கல்கி நிறைய திரைப்பங்களைப் பார்த்த கிரௌன் திரையரங்கம் குறித்த விவரங்களுக்கு, காண்க ஷங்கர் எல்.ஆர்.(2011, ஆகஸ்ட் 27)

4. பிரகலாதன், இரண்யன் அல்லது இரண்யகசிபுவின் கதைக்கு காண்க: டிம்மிட், கோர்னெலியா மற்றும் ஜே.ஏ.பி.வான் புர்ட்டினென் (1978), பிபி.312-19. பிரகலாதனின் கதை திருமாலின் மீது அவனுக்கு இருந்த

தீவிர பக்தியையும் திருமாலைக் கடவுளாக ஏற்காத, அதனால் அவனது நம்பிக்கையை வன்மையாக எதிர்க்கும் தந்தை இரண்யனுடனான பகை கலந்த உறவையும் சுற்றி நகர்கிறது. இரண்யன் கடுந்தவம் செய்து பெற்ற வரங்களின் பயனாக அசாதாரணமான சூழலிலேயே கொல்லப்பட முடியும் என்பதால் கதையின் இறுதித் தருணத்தில் பாதி மனிதன் பாதி சிங்கமாகிய நரசிம்ம அவதாரம் எடுத்து வரும் திருமால் இரண்யனைக் கொன்று பிரகலாதனின் உயிரைத் திருமால் காப்பாற்றுகிறார்.

5. காண்க ஸ்டீபன் ஹ்யூகெஸ் (2010) 1930களில் ''தமிழ்'' சினிமாவின் கட்டுக்கோப்பான தன்மை குறித்த தவிர்க்க முடியாத வாதத்துக்காக. தமிழ் சினிமா நிலையான மொழி சார்ந்த கட்டுகளைக் கொண்டிருந்ததற்கு எதிராக வாதிடுகிறார்.

6. காண்க ஸ்டீபன் ஹ்யூகெஸ் (2010) தமிழ் ஊமைப் படங்களின் எண்ணிக்கை 1930இல் 300ஆக இருந்து 1935இல் 7 ஆகக் குறைந்துவிட்ட விவரங்களுக்கு : ப.12

7. காண்க கே.பி.சுந்தரம்பாளுக்கு அளிக்கப்பட்ட சம்பளம் தொடர்பான தகவல்கள் மற்றும் ஒரு நடிகையாக அவ்வளவு பெரிய தொகையை அவருக்குப் பெற்றுத் தந்த பிரப்லயத்துக்காக ஊடகங்களுக்கு நன்றி சொன்னது, பின்னர் தான் பெற்ற பணம் குறித்து பொறாமையுடன் செயல்பட்டதாக சிலர் மீது குற்றம்சாட்டியது ஆகியவை தொடர்பான விவாதங்களுக்கு. கர்னாடகம் 1935b, பப 26-27

8. எதிர்பார்த்தபடியே கல்கியின் திரைக்கதையும் வசனங்களும் அவருக்குத் திருப்பிக் கொடுக்கக் காத்திருந்த, அவரை ஏற்றுக்கொள்ளாத விமர்சகர்களிடமிருந்து பல எதிர்மறை விமர்சனங்களைப் பெற்றது. எடுத்துக்காட்டாக: பி.ஆர்.எஸ் (2004).

9. ஆனந்த விகடனின் பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் பணியாற்றிய பாஸ்கர் சக்தி, சமகால தமிழ் சினிமாவின் வெற்றிகரமான திரைக்கதையாசிரியர்களில் ஒருவர். பலரால் பாராட்டப்பட்ட *வெண்ணிலா கபடிக் குழு* (2009), *அழகர்சாமியின் குதிரை* (2010) ஆகிய படங்களுக்கு வசனம் எழுதியவர். *அழகர்சாமியின் குதிரை* அவர் எழுதிய சிறுகதையைத் தழுவி எடுக்கப்பட்ட படம்.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2020, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் மார்ச் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com
aranjournal@gmail.com
72995 87879